Koviloor Digital Library


2

ஆறெடுத்தந்தாதி

Acc. No. 45768

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 45768

Koviloor Digital Library



Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 45768
91/1

வேலுமயிலுந்துணை.

ஆறெழுத்தந்தாதி.

காப்புகள்.

கணபதிதுதி.

நேரிசைவெண்பா.

கற்பகமிருக்கத்தன் கந்தமிகுநந்தவனப்
பொற்பகமிருக்கப் பொதிகைமுநீ - நற்கரகத்
தண்ணீரையாதரித்த வைந்துகரன்காப்பாமெம்
மெண்ணீரை யாறெழுத்திற் கே.

முருகர்துதி.

கட்டளைக்கலித்துறை.

ஆறுமுகமுண்டு பன்னிருதோளுமுண் டங்கையினி
லேறியவேலுண்டு வெற்றிமயூரமுண் டேவல்செய்ய
மீறியசிங்கந் துரைவீரவாகுண்டு வேளைக்கிங்கே
கூறியபோது வருவான் குமாரகுருபரனே.

Koviloor Digital Library

நூல்.

ஆநந்தமாறெழுத்தாலயமாமெனதங்கமெல்லாந்
தாநந்தமாதிமுதற்பொருளாகிசத்தாங்கமுநீ
மோநந்தமுன்னுளதென்னுளதுன்னுள்தென்னுளதா
லீநந்தம்போக்கியெனைநீயதாக்கியவென்குருவே. (௧)

என்குருவேக்ருபையாநந்தமோனமெழிற்சிவனார்
தன்குருவேபரையீராறுகோலஞ்சமைந்தநமைப்
பின்குருவேவிந்துநாதம்பரம்பெரும்பேரொளிக்கு
முன்குருவேமுருகோனாறெழுத்தென்னுமூலங்களே. (௨)

மூலங்களேசிவஞ்சத்திவித்தாயுன்னுமுன்பிறந்த
சீலங்களேபஞ்சகர்த்தாவுநின்வழித்தேறியொரு
காலங்களேயொக்கவேகிக்கருப்புக்கடையினின்ற
கோலங்களேமுருகோனாறெழுத்தின்குணக்குன்றமே. (௩)

குணக்குன்றமேயன்பருள்ளூடுருவிக்குமுகுமென
மணக்குன்றமேமுருகாவென்றன்கன்மத்லைதமாற்றிடுங்கங்
கணக்குன்றமேயெங்குமாறெழுத்தாயுருக்காட்டியபொற்
சுணக்குன்றமேயண்டபிண்டமொன்றாய்நின்றருத்திரமே. ()

திரமேமுருகநின்னாறெழுத்தங்கிதன்சிந்தைபற்றிப்
பரமேயிதென்றுள்ளுணர்ந்தோர்க்குமன்பர்பழவினைநீட்
டுரமேசிதையும்பிறப்பறுங்கூற்றுமொழியுநில
வரமேயெக்காலமுஞ்சாகார்சிவசித்தர்மாநிலத்தே. (௫)

Koviloor Digital Library

நிலத்தேயிறப்பும்பிறப்புமருக்கன்மநீங்குமிப்பூ
தலத்தேமிதக்கினுமேமுருகாவென்றாறெழுத்தைப்
பிலத்தேபிடித்தவற்கப்பானின்றாநந்தப்பேரொளிரச்
சலத்தேமிதப்பரல்லாற்பின்னைவேறுந்தடையிலையே. (௬)

தடையாதுபாசத்துருகாதுமாயைச்சரமறுகி
லுடையாதுகாயமுலையாதுள்ளாவியுலகிலினிப்
படையாதயன்கைப்பவநீக்கிஞானப்பரத்துறைவா
ளடையாதெங்கெங்குஞ்சிவமாகக்காட்டுநின்றாறெழுத்தே. ()

ஆறெழுத்துண்மையறியார்கள்கன்மமறுக்கவப்பால்
வேறெழுத்தில்லைவெண்ணீறில்லைமால்சிவவேடமில்லை
தேறெழுத்தேதயன்கையுங்கருக்குழிச்சேறலும்பின்
மாறெழுத்தந்தகன்றென்புலத்தேயென்றும்வௌவுவரோ. ()

வௌவுநின்றாட்கன்பிலாதேநரகத்தைவௌவும்வஞ்சர்க்
கெவ்வழிமோக்கத்திற்கேதுவென்றாலெழுத்தாறுளநின்
சௌவுரவ்வவ்வணபவ்வுவவ்வக்கரந்தன்னிலொன்றைக்
கௌவுவர்கௌவுவர்சொற்பிறந்தாற்றிரங்காட்டுமதே. (௯)

கதிகாட்டுமோரெழுத்தோரெழுத்தேவச்ரகாயந்தரும்
நிதிகாட்டுமோரெழுத்தோரெழுத்தேயுண்ணிரப்புமருண்
மதிகாட்டுமோரெழுத்தோரெழுத்தே என்னுள்வைத்தபொற்
றுதிகாட்டுமேகுகநின்றாறெழுத்துள்ளசூத்திரமே. [றாட்

சூத்திரநம்முடற்சக்கரமேருவைச்சுற்றியரை
மாத்திரையிற்சந்த்ரர்சூரியர்போய்வரும்வாசிதனைக்

Koviloor Digital Library

காத்திரலாயமட்டியோகத்திருந்துங்கருமவுணச்
சாத்திரங்கைவருநின்னாறெழுத்துந்தரிநெஞ்சர்க்கே. (கக)

நெஞ்சேபொற்பீடநந்தேகஞ்சிவாலயநீள்பொறிக
ளஞ்சேயிவைபெறுமதாரஞ்சத்தியருணிலைவிட்
டஞ்சாதுணர்வுமுருகன்றனாறெழுத்துன்னுவற்குச்
செஞ்சேவலன்றனக்குஞ்சரீரமுஞ்சித்துமொன்றே. (கஉ)

ஒன்றேமுருகநின்னாறெழுத்தோசையுலகமெல்லா
நின்றேபலபொருணீயென்றுநானென்றுநீதிவெவ்வே
றன்றேசமயங்களீராறுமாய்நின்றவாநந்தநீ
என்றேதெளிந்தவர்க்கேகன்மமாயையிருளறுமே. (கங)

இருளறுமெங்குமொளியாய்நிரம்புமிரவுபகன்
மருளறுமாயுளும்வர்த்திக்குங்கர்த்தன்மட்டற்றுயர்ந்த
பொருளறுகோணத்தினுள்ளேயரியபொறியுளநின்
றருளருணாசலவேலையுனதெழுத்தாறுன்னவே. (கச)

உன்னரிதாமுருகோனாறெழுத்தினையுச்சரித்தார்க்
கென்னரிதாம்பொருளொன்றிலையேயிறப்பும்பிறப்பும்
பின்னரிதாமிவையேதன்றிப்பேசிற்பிரமனிட
தன்னதிகாரமுந்தப்பியப்பானின்றதானவனே. (கரு)

தானவனாதிவிநாயகனாண்முகன்சங்குசக்ர
வானவன்ருத்திரன்மயேஸ்வரனீசன்வடிவிவையே
யானவனாறுமுகத்தன்பரசமயத்தன்முரு
கோனவனின்னெழுத்தாறேபொருளெனக்கொண்டவனே. ()

Koviloor Digital Library

கொண்டனைகையிற்பொறைவேலன்பின்புறு கொக்கிரண்டா
கண்டனைமஞ்ஞையுஞ்சேவலுமாய்வரக்காரணத்திற் [ய்க்
பண்டனையாதிபகவனிப்போதவன்பாலனென
விண்டனையாறெழுத்தாய்முகமாறுடன்மேவியதே. (௰௭)

மேவியவாதிசிவாயசதாசிவவேலைதனி
லாவியநம்பெருமாண்முருகாவென்றுன்னாறெழுத்தே
தாவியவுள்ளமதாகவெண்ணீற்றைத்தரித்தனையே
கூவியபேர்கண்முன்னஞ்சலென்றேவந்துகூடுவையே. (௰௮)

கூடுவையன்பருள்ளாலயமாமெனக்கூடியிருந்
தாடுவைநீமுருகோனாறெழுத்தினையாரொருவர்
நாடுவைநீயவர்கன்மந்தொடைத்துநரகரித்துப்
போடுவைநீயென்றுகண்டோரடைவர்நற்புத்தியிதே. (௰௯)

புத்தியுநீமுருகோனாறெழுத்தின்பொருளரியச்
சத்தியுநீசிவமாயெங்குமாய்நின்றசர்வமுகச்
சித்தியுநீயன்பர்பார்க்கின்றஞானத்தெளிவுதரு
முத்தியுநீயன்றிவேறில்லைவேதமுடிந்திடவே. (௨௰)

முடிந்திடம்பேச்சற்றமோனமெஞ்ஞானமுதல்வநின்னைப்
படிந்திடமேபதிபாசம்பசுவிருட்பற்றற்றதும்
விடிந்திடந்தானென்னுநானென்னுமாயையும்விட்டெவையுங்
கடிந்திடத்தப்புறத்தப்புறத்தாநந்தங்காணுமதே. (௨௧)

காணுமென்பான்முருகோனாறெழுத்தின்கனியையுண்டே
பூணுமென்பாலைம்புலனுமொன்றுச்சரம்பூரித்துள்ளாய்த்

Koviloor Digital Library

தோணுமென்பாலிற்றசையூடசைவற்றசோதியொத்தா
லாணுமென்பார்பெண்ணுமென்பார்நின்பாலன்றறிவதுவே.()

அறிவதுவேதநின்னாறெழுத்தைந்தெழுத்தாலதிலே
பிறிவதுமவ்வெழுத்தண்டபிண்டத்திற்பெருஞ்சித்திவாய்ச்
செறிவதுமப்பதநின்றோரெழுத்துந்திகாந்தமுட்டி
மறிவதுகண்டுதன்னுள்ளேதெளிந்தமவுனங்களே. (உங)

ஏதானவாறெழுத்துள்ளைந்தெழுத்தன்றெடுத்ததெல்லாஞ்
சூதாகநானென்றுருப்பண்ணும்வார்த்தையைத்தூக்குதற்கோ
ராதாரமாகியகமும்புறமுமருவுருவா
மோதாவுணர்வுமுயிருமதாய்நின்றதோரெழுத்தே. (உச)

ஓரெழுத்தாதிநிராமயமைவருமுன்னரியப்
பேரெழுத்தவ்வெழுத்தேயம்மைதேவிபிறங்கவள்பா
லாறெழுத்துஞ்சடைவானவர்தாமவனோடுதம்மைச்
சீரெழுத்தாறுமோர்வேலாயெடுத்ததிருவுருவே. (உரு)

திருவுருவாகியசெவ்வேண்முருகனஞ்சிந்தையுள்ளே
யருவுருவாய்நின்றவாறெழுத்தாயுன்னையாண்பெண்ணிதென்
றொருவுருவாய்க்கொள்ளப்போகாதவரவருள்ளத்திலே
கருவுருவெப்படியப்படியேநின்றகாரணமே. (உசு)

காரணகாரியமிரண்டையுந்தாங்கிக்கடவுண்முன்னாட்
பூரணஞானமுகமாய்ப்ரவேசிப்பப்பொங்கழலை
யாரணங்காப்பதெனவேயருவுருவாயநந்த
நாரணரூபமுஞ்சங்கரவேடமுநண்ணினதே. (உஎ)

Koviloor Digital Library

நண்ணினவாறுமுகமாய்முருகனமதுளத்தி
லெண்ணினகாரியமெல்லாந்தரும்பொருளெல்லையில்லாக்
கண்ணினனுறெழுத்தானமெஞ்ஞானக்கருப்புயர்ந்த
மண்ணினும்விண்ணினுமியாவுமொன்ருய்நின்றமாமயமே. ()

மாமயமாமுருகோனுறெழுத்துமட்டற்றவரி
வோமயமாமவ்வுமுவ்வுமதாய்ச்சுழித்தோங்குமுச்சிப்
பூமயமாய்ச்சிவமாய்ப்பறையாய்ப்பற்பொறியொடிநி
ராமயமாயெங்குந்தானுயிருந்தரகசியமே. (உக)

ரகசெயமாமுருகோனுறெழுத்தையுநம்பினர்க்குச்
சுகசெயமன்றியவசெயமில்லைத்தொழிற்படுத்தன்
முகசெயுந்தம்பநமோகநம்பேதநமுன்னளிப்போ
டகசெயமுச்சமுஞ்சங்காரமெட்டிற்குமாதியதே. (உஉ)

ஆதிபரைகங்கைதெய்வானைவள்ளியரன்முருகன்
சோதிமுகமைந்துமாறுமுகமமுச்சூர்க்கதிர்வேற்
கோதிலிடபமயில்கொன்றைமாலைகுளிர்கடப்ப
மோதியவஞ்செழுத்தாறெழுத்தாஞ்சுடருற்பனமே. (உங)

சுடர்சங்குசக்கரம்வேற்குன்மழுவிற்சுரிகைகுளி
ரடர்தண்டுதண்டுகுடாரம்விட்டேற்றரிவாள்கரக
மிடர்துஞ்சுபாசமெரிபாணமானேடிராறுகையும்
படரும்படிப்பொங்கியாறெழுத்தங்கிபரந்ததுவே. (உச)

பரந்தந்தணன்செய்கைபல்லாயிரமும்பட்டுருவி
நிரந்தந்தாஞ்சிரம்பாதலம்பாதநின்றோர்முகமாய்த்

Koviloor Digital Library

துரந்தன்றியாவையுஞ்சூர்க்களுமெற்றித்தொம்மென்னநடித்
தரஞ்சுந்தரஞ்சங்கரஞ்சம்புவாய்நின்றதாறெழுத்தே. (௬௩)

எழுத்தாறுமொன்றுபட்டேகிக்கருத்துளெழுந்ததொளி
வழுத்தாதமூலமுருகன்பொற்றாடனைவைத்துளத்தே
பழுத்தோகையன்போடிரவும்பகலும்பரமுனக்கென்
றழுத்தாதசத்தப்பிறவிக்கடல்விட்டகலரிதே. (௬௪)

பிறவிக்கடற்குடற்சக்கரமாவிபெருஞ்சரக்கி
லறவித்தபத்தொன்பதாறுமச்சாணியயன்கையினு
லுறவித்தமந்திரமூன்றுனங்கூபமுன்னஞ்செழுத்துந்
துறவித்தவொட்டன்குகனாறெழுத்தின்சுயகர்த்தனே. (௬௫)

கத்தன்பரங்கிரிசீரலையேரகங்காண்பலகுன்
றத்தன்றென்சோலைமலையாவினன்குடியாறுமென்பர்
வித்தன்பதாயென்னுளாதாரமாறும்வெவ்வேறுருவாம்
பித்தன்சருவகுருவாம்சடாக்ஷரப்பேரொளிக்கே. (௬௬)

குருவானவையன்சடாக்ஷரத்தாகமங்கூறிமுன்னே
யருவானவெட்டவெழுபாருணாயுணர்வற்றவிடம்
பெருவானறிவுதெளிவாயளவற்றபேரொளியா
யுருவானதீதமுருவாம்படிக்கனியுற்றதுவே. (௬௭)

உற்றதுமெவ்விடமிவ்வண்ணமின்னதென்றோதநினைப்
பற்றதுபற்றற்றதும்மனப்பாவகமானதெங்கே
பெற்றதெவ்வந்தரமோமூச்சுவிட்டதும்பின்பசையாய்ச்
சொற்றதுசொற்றிடத்துண்டுளந்தேக்கித்துஞனுக்கென்றதே.

Koviloor Digital Library

துணுக்கென்றுபமுன்சரணஞ்சரணெனத்தோற்றியொரு
கணுக்கண்டிலையுடன்பூத்ததுகாய்த்துக்கனிவடிவாய்த்
திணுக்கென்றுள்ளுடெழுஞ்செக்கரும்பச்சையுந்திங்களுமா
யணுக்கண்டதுண்டிலையென்றேநிசபரமானதுவே. (௩௯)

பரமானதாதிசிவமாதிசத்தியுற்பத்திமுத்தி
யுரமானபார்வையுறுவிந்துநாதத்துதிமௌனந்
திரமானசற்குருதேசிகநாமந்திடாரித்தநந்
தரமாமகாரமுகாரமோங்காரித்துச்சத்தித்ததே. (௪0)

சத்தித்தவளவன்றுனுபவனவடன்வடிவாய்
முத்தித்தபச்சைமுழுமுதலாய்ச்சண்முகவடிவா
யத்தித்தறுசமயந்தொழிலாறுக்குமாறெழுத்தாய்ச்
சித்தித்தென்னுவிளையாடலண்டத்தின்செய்கையதே. (௪௧)

அண்டத்திலுள்ளதுபிண்டத்திலுமுண்டவ்வாறெழுத்தும்
பண்டித்ததற்சதகோடிமகாசித்திபண்ணுதற்காய்த்
துண்டத்துடலுயிராய்ப்பணிசெய்தசூத்திரத்தாற்
கண்டித்தநமசிவாயாவெனவுருக்காட்டியதே. (௪௨)

உருவானமூலமதுவட்டநாவிதழுள்ளின்முக்கோ
டருவாம்பிரணவச்சத்தியுட்சவ்வுஞ்சருவமபக்
குருவாமதோமுகமவ்வேதியாநங்குளிர்ந்தலிங்க
மருவாமவையிவைதானேகணபதியானதுவே. (௪௩)

ஆனமண்ணாறிதழ்நாற்கோணம்பொன்னிறமஞ்சுகுண
மீனமின்மூலமதுள்ளினெவ்வாகுமிவையுவந்த

Koviloor Digital Library

பானமமிர்தமுகஞ்சத்திதேவிசொற்பார்வதியா
டானுயர்மந்திரநவ்வாகுநான்முகன்சக்கரமே. (சச)

கரமாயவைப்பறுகோணம்வெண்பத்திதழ்காண்குணநாற்
றரமாயருளவுவப்பலங்காரமுட்டந்தையதாய்
வரமாயதேவிதிருமுகம்வாமமாமந்திரமே
திரமாயதோநமநாராயணுவரிசெய்கையதே. (சரு)

அரிவன்னிசெம்மைமுக்கோணமுமூன்றிதழாறிரண்டாந்
தரியுண்மைநவ்வுஞ்சிவஞ்சத்திபார்வதிதானுளதாம்
பரியுண்ணரோத்ரமகோரமுகமன்பர்பாவமறத்
தெரியுண்மைமந்திரஞ்சிகாரமுருத்திரன்சேவடியே. (சசு)

அடியானவாயுகறுப்பறுகோண்பதினுறிதழ்மேற்
றிடியாணிரண்டுகுணம்பொருட்பேர்வவ்வுடேகலிங்கம்
பிடியானசாம்பவிசத்திமுகந்தற்புருடமருட்
டுடியானமந்திரமேவாம்மயேசுரன்தோற்றங்களே. (சஎ)

தோற்றியமானதுதாபிறவட்டந்தொடுமிதழ்ரண்
டேற்றியவோர்குணமவ்வாம்பரம்பற்றியேபிரியஞ்
சாற்றியபங்கின்மனோன்மணிதேவியீசானமுகம்
போற்றியவவ்வரிறீயுஞ்சதாசிவபூரணமே. (சஅ)

பூரணமாகியவான்காலனலப்புபூமியிவை
சாரணமூலமுந்தானாகியோரிதழ்த்தாமரைமேற்
காரணவவ்வுமென்னுள்ளஞ்சுடற்பிறைகாட்சியுமா
யாரணயோகிபராசத்திதேவிசின்னங்கமதே. (சகூ)

Koviloor Digital Library

ஏயுமிதழ்ப்பத்தொன்றினுநின்றவெழுத்துறுப்பாங்
காயமுட்சக்கரமாறெழுத்தாகுமோர்காத்ரமுயிர்
பாயும்பிரணவமேபரைதோற்றம்பலசித்திற்கொண்
டாயுமுடற்பொருளாவியும்வேட்சுழியாநந்தமே. (௫௰)

சுளியாதொருவர்க்குத்தோயாதிதன்பர்க்குத்தோயும்வெட்ட
வெளியாணையில்லைமெஞ்ஞானவதீதம்விளங்கியசொற்
றளியாறெழுத்துள்ளவாதாரமாறொடுதற்பரைவிட்
டளியாதிடத்திற்குருமுருகோனின்றதிசயமே. (௫௧)

அதிசயமாறெழுத்தாறுஞ்சிவமுமறுமுகமாய்க்
கதிசெயுமூரற்பரைநெற்றிக்கண்ணெனக்காட்சியுமாய்
விதிசெயுமாமயில்வேற்சத்திபாவுங்கைவேற்படையாற்
றுதிசெயுமன்பர்முன்னோங்காரவட்டத்துட்டோன்றியதே. ()

ஓங்காரவட்டத்துளாதாரமாறும்விட்டோங்கிபறி
றீங்காரவட்டத்துளேவிந்துநாதமிணைச்சுடர்மேற்
பாங்காம்பரைசிவமாகியொன்றாகிப்பரவெளிநின்
றாங்காரத்தாண்டவியாறெழுத்தாறுமுகத்தம்மையே. (௫௩)

ஆறுமுகத்தம்மைவேலாயிநின்னெழுத்தாறுமுரு
வேறுமுகத்திற்கிலக்கோர்முகமில்லைவெவ்வினையைச்
சீறுமுகத்திக்குமாராயியன்பர்சிந்தித்துநினைப்
பேறுமளித்தவட்குள்ளெழுத்தாந்திரற்பெண்கொடியே.(௫௪)

பெண்கொடியேபரமாயிசிவாயிபிரணவத்தி
னண்கொடியேமுருகாயிகுகாயிநலமுடைய

Koviloor Digital Library

பண்கொடியேயென்னுளமேயிரவும்பகலும்விடா
தண்கொடியாதிசடாக்கரியீஸ்வரியம்பிகையே. (௫௫)

அம்பிகையையம்பத்தோரக்கரியுச்சரியன்பர்தமை
தம்பிகைவெவ்வினைசங்கரிசூலிசரமகரந்
தும்பிகையைந்துடையான்றொழில்வாசிச்சுகந்தனெனக்
கும்பிகையம்பரவல்லிசடாக்கரிகுண்டலியே. (௫௬)

குண்டலிபாரதிலக்குமிபார்வதிகோமளைப்பூ
மண்டலிசாம்பவிதேவிமனோன்மணிவாகினிப்ர
சண்டலிகாரியகாரியுகாரிசடாக்கரிமா
விண்டலியாண்பெண்ணிரண்டுருவாய்நின்றமின்னொளியே. ()

மின்னொளியாயண்டபிண்டசராசரம்விண்ணுமண்ணுந்
தன்னொளியானசடாக்கரிசாம்பசதாசிவமென்
றுன்னொளியீஸ்வரன்ருத்திரன்மாலயனேதரிதா
மன்னொளியைவர்க்குமாதாவுந்தையலுமானவளே. (௫௮)

மாதாபிதாகுருதெய்வம்பெறுதவமற்றுமுள்ள
தாதாவலியிட்டகாமியமோதுஞ்சடாக்கரமென்
றூதாரமென்றனுடற்பொருளாவியருட்பலனின்
பர்தாரவிந்தமுந்தந்தென்னைக்காக்கும்பராசத்தியே. (௫௯)

பாராசத்தியுத்தமிபாசாங்குசத்திபரஞ்சுடர்மா
நிராசத்திநீரணிபூரணிகாரணிநின்மலியாம்
வராசத்தியாதிவடுகாயியட்டவயிரவிநந்
தராசத்திருத்ரிசடாக்கரிநிட்களத்தாண்டவியே. (௬௰)

Koviloor Digital Library

9/1

தாண்டவிகோரிமகிடாசுரன்சிரந்தட்டழியத்
தீண்டவிபாசுபராக்ரமசூலினிசீரரவம்
பூண்டவிராகிநிராகிபொன்னம்மையென்புன்மையறுந்
தாண்டவிபஞ்சசபைவல்லியாறெழுத்தாநந்தியே. (கக)

ஆநந்தியம்மையரேபுவனுயியகாரசத்தி
தாநந்திகாலவடவாக்கினிசிவசம்புபர
மாநந்திபேதநமாமயரூபிநிவாதிகமழ்
தேநந்திபூங்குழல்வாலைபுவனைதிரிபுரையே. (கஉ)

திரிபுரையாறெழுத்தாங்காரிநங்கலிசிந்தவறுத்
தெரிபுரையம்பிகைவம்பரைவேற்கொண்டெறிந்துயிரைப்
பரிபுரையென்னுளமேகோயிலன்பற்றுட்பாயலுமாய்
மரிபுரையென்னகநின்னகமாக்கொண்டமாதங்கியே. (கங)

மாதங்கியன்பர்பிறவிக்கடலைவடவனலாய்க்
கோதங்கிமுன்னைவினையையுங்கூற்றையுங்கோதியுள்ளத்
தேதங்கிநின்றுவிளையாடும்பெண்பிள்ளையென்செவிக்கே
போதங்கிலியையுஞ்சவ்வுமொன்றாகியபூரணமே. (கச)

பூரணமவையெனப்போக்கும்பிறப்பைப்புணர்கிலியுங்
காரணநின்னருட்காட்டிடுஞ்சவ்வெனக்கன்னிகைநின்
றூரணதற்சொருபம்மவநாக்குவையாறெழுத்தி
றூரணநான்முகனைம்முகமாய்நின்றநாயகியே. (கரு)

நாயகிநின்னன்பர்பாதத்தையற்சிக்குநற்கடம்புந்
தோயகிலாரமுஞ்சாந்தமுங்கொன்றைத்தொடையலுநின்

Koviloor Digital Library

சேயகிலாண்டமென்றேத்தியவாதிதிருமுடிக்கே
யாயகிலாண்டமுந்தேக்குநின்றாறெழுத்தக்கரியே. (௬௬)

ஹரிஓம்நமோத்துசிந்தமகரமுதலவ்வளவுந்
தெரிவானமந்திரமீராறெழுத்துநின்சித்தில்பல
விரிவாகியவண்டபிண்டசராசரம்வேதமெவ்வும்
வரியானதுங்கண்டதவ்வுஞ்சிவாயவசியென்பதே. (௬௭)

அவ்வுஞ்சிவாயவசியென்னுமந்திரமஞ்சுடன்மூன்
றுவ்வுஞ்சடாக்கரமும்மண்டலத்தினுமொட்டவுடன்
சௌவுஞ்சிவஞ்சத்தியச்சத்தியாவியைக்காக்குமவ்வுஞ்
சவ்வுஞ்சிவசிவவென்பாரிருவினைதானறுமே. (௬௮)

அறுமாம்பசுவென்னையயன்குருபரன்றாளடைந்தோர்
மறுதாதர்கர்ப்பஞ்சிசுநசித்தோர்கள்வதைபலவுஞ்
செறுமாம்பகுதிசிவத்துவத்தீயையுந்தின்னுநின்னைப்
பெறுமாதவற்கெழுத்தாறுங்குடிலைப்பெருநெருப்பே. (௬௯)

நெருப்புநெருப்புப்பிரணவப்பெண்ணுந்தனெஞ்சுவஞ்சர்க்
கிருப்புநெருப்புக்கபாடநின்னன்பர்க்கிரவிவெண்ணெய்க்
கருப்புநெருப்புறைகாணூர்மெய்க்கண்டகனிகயிலைப்
பொருப்புநெருப்புவிருப்புறுஞானப்பொறிக்கொழுந்தே. (௭௦)

கொழுந்தேமரகதக்குன்றேயிரத்நக்கொடிமுடிபூத்
தெழுந்தேப்ரகாசிப்பையீரேழுலகெண்டிசைபுவனந்
தொழுந்தேவருந்தொழில்வேதம்பலவெழுதோற்றத்தெம்மை
யழுந்தாமுன்பெற்றெடுத்தானதிலாறெழுத்தக்கரியே. (௭௧)

Koviloor Digital Library

அரிஓமரகரவவ்வுஞ்சிவாயங்கியங்கிசமாங்
கிரிஓமையுங்கிலியுஞ்சவ்வுஞ்சவ்வுங்கிலியுமைய
மரிஓஞ்சொருபவருட்செயும்ரீயரியுஞ்சிரியும்
திரிஓங்கிலியுஞ்சரஹணவாயிசிவகுருவே. (எ௨)

குருவாந்திரிபுரபவநமவாயிகுமரிமகா
திருவாந்திகழொளிபவ்வவ்வுமானசிவக்கடலே
மருவாம்பரிபுரபவசிவமானந்தவாரிபெறுங்
கருவாஞ்செயலொழிபவநமவாயிசயற்கண்ணியே. (எ௩)

கண்ணீயெனுஞ்சரஹணபவதேவிகமலநரி
நண்ணார்புரமெரித்தோன்மூவரைப்பெற்றநாயகியே
பெண்ணீரவர்க்குமம்மாமென்றுநின்றபெருஞ்சுடரோ
யண்ணீரெழுத்திற்குந்தாயாகிவந்தவரும்பொருளே. (எ௪)

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, வெனுமைந்தெழுத்தி
இ, ஈ, ஒ, ஓ, ஔ, நமநாராயணாயவென்றெட்டெழுத்தி
உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, ஔவென்பதாமைம்பத்தோரெழுத்தி
எ, ஏ, ஒ, ஓ, ஔவும், மௌவுமதாய்நின்றதம்பிகையே. (எ௫)

அவ்வுமுவ்வுமொவ்வுமவ்வொடுறீங்கொடையுங்கிலியும்
சவ்வும்பரைசிவமங்குங்கொங்கென்றசத்தம்மிரண்டு
மௌவுஞ்சரஹணபவவென்றஞானத்தொருவனரு
ளொவ்வுமரிகூவிரண்டையுந்தாங்கிநின்றோரெழுத்தே. (எ௬)

அரிக்குமுதற்பொருளெப்பொருளும்மண்டபிண்டமுமங்
குரிக்குஞ்சடாக்கரத்தோசையைப்பற்றுங்குணமறிந்துச்

Koviloor Digital Library

சரிக்குந்தொழும்பர்க்குளாதாரமாறுந்தங்குமிருண்
மரிக்கும்பரவெளியாகுநின்பாதம்வழிப்படுமே. (௭௭)

வழிப்படும்வாசலில்வாசியுள்வாசலில்வாங்கியப்பாற்
சுழிப்படுமாறெழுத்தங்கியைக்கோர்த்துச்சுழித்தவல்லா
ரழிப்படுந்தன்றலைமேலயன்கையெழுத்தஞ்செழுத்துங்
கழிப்படும்பின்புமனோலயதில்லைகணவினுமே. (௭௮)

கநமானமாயமிக்காயம்விட்டாவிக்கடக்குமுன்னே
மநமானபாவியைத்தன்வசமாக்கிவசியெனுமும்
பநமானவேணியிலாறெழுத்தேத்திநின்பாததரி
சநமானயோகியழியாரெக்காலமுஞ்சத்தியமே. (௭௯)

சத்தியமூலத்திரவியையூன்றிச்சரநிலைமேற்
பத்தியதீயிற்சகத்திரத்தெல்லையும்பாழ்படுத்தி
முத்தியசந்த்ரகலையூடுருவிமுடிவிலுன்னை
யத்தியசீவன்சிவமாகக்காட்டுநின்னாறெழுத்தே. (௮௰)

ஆறெழுத்தானநின்னானந்தமைம்பத்தோரக்கரத்திற்
கீறெழுத்தோறெழுத்தைந்தெழுத்தீறெழுத்தேத்திவல
மாறெழுத்தங்கிவடிவாய்கடாசலவாசல்புகுந்
தாறெழுத்துண்ணமிர்தஞ்சிவயோகிக்கிதுற்பனமே. (௮௧)

உற்பனமாகியஒங்காரவட்டத்தையூடுருவி
யற்பனமாக்கையினுள்ளேசிவாவெனுமக்கரத்தைச்
சற்பனபாடைக்குந்தாயாரெழுத்தினுட்டாக்கியன்பா
னிற்பனயோகிதபசழியாதிதுநிச்சயமே. (௮௨)

Koviloor Digital Library

நிச்சிநிலாக்கொழுந்தாறெழுத்தங்கியைநின்மலமா
யுச்சியுமூலமுநோக்கிரண்டாலமைத்தோரெழுத்தா
லச்சினைநாட்டிசிவாக்கினிமூட்டிநெஞ்சண்டபிண்டம்
வச்சிரயோகியவனேவயிரமகாசித்தனே. (௮௩)

சித்தனுஞ்சீவனுந்தேகமும்வாசியுஞ்சேவைசெய்யும்
பத்தனும்பாசமுமாறெழுத்தேத்திப்பதனமதாய்
கத்தனுங்கப்பலுங்காற்றுங்கடலுங்கயிறுங்கள்ள
வெத்தனும்பாதையும்பார்த்தோடுவார்கரையேறுவரோ. (௮௪)

ஏறுவதுகண்செவிமூக்குநாக்குநெஞ்சம்மிரண்டு
கூறுசெய்தந்தரங்கத்தேநமதுகுருவெனவே
தேறுவதாதியுமந்தமுந்தாங்கிச்சிவநடுவா
யாறுதலம்வரையாறையும்பார்ப்பதிவ்வாறெழுத்தே. (௮௫)

ஆறெழுத்தோரெழுத்தாற்பெறவாசியையச்சமின்றி
யாறெழுத்தோரெழுத்தாற்கடிவாளமிட்டந்தரங்கத்
தாறெழுத்தோரெழுத்தாற்கல்லணையைவத்தங்கவடி
யாறெழுத்திறெழுத்தோரெழுத்தேத்திடவானந்தமே. (௮௬)

அந்தத்திற்பின்கலையாதியிலேயிடையாக்கிவர
விந்தத்திற்பாய்ந்தசுழுமுனைபோய்ப்பெருவெள்ளத்துள்ளாய்
பந்தத்தனற்கதிர்பான்மதிநாதப்பரப்புமுப்பா [ப்
ழிந்தககண்காட்சிக்கிப்பாலென்னையாண்டவிறையிருப்பே. ()

இறையிருக்கும்மிடமெய்திறுங்கந்தனிடம்புகுந்தான்
மறையிருக்குங்கலைக்கொப்பறுமட்டும்ருவல்ன்றிச்

Koviloor Digital Library

சிறையிருக்கும்படியித்தலங்கொஞ்சஞ்சிணுக்கைவிட்டோர்
துறையிருக்கத்துறைசென்றுடக்கன்னிதுடக்கறுமே. (அஅ)

தொடக்கறுமின்பமுந்துன்பமுங்காட்டிச்சுமந்தலையும்
விடக்கறுமெய்பொய்விருப்பும்வெறுப்பெனும்வெட்டவெளி
நடக்கிறபாதைநடக்கறியாமனடக்குமிந்தச்
சடக்கறுப்பார்மனமற்றதெலாங்கெடுசாத்திரமே. (அகூ)

சாத்திரம்வேதஞ்சமயம்வண்ணுத்திதண்ணீரில்விட்ட
மூத்திரம்போம்படிபோமநனேயந்தமூத்திரமோர்
பாத்திரங்கொள்ளப்பலனுண்டதிலொருபாமுமில்லை
கோத்திரமுங்குலமுங்குடிபோய்பின்னைக்கூடினர்க்கே. (கூ0)

கூடினதாருகைக்கொண்டவனுருகுருக்களெவன்
பாடினமந்திரமாறுமிந்நான்கும்பொய்ப்பாரிருணீ
வீடினபோதுமெஞ்ஞானவதீதவிலாசவெளி
நாடினதும்மங்குநின்றதுநீவள்ளிநாயகமே. (கூக)

நாயகநீயெனநானேதுநானெனன்னநம்பாலுன்னைத்
தாயகமென்னுந்தாமேதிரிசொல்லுந்தானிறந்தும்
போயகமும்புறமும்போன்றதாம்பரிபூரணத்தே
யாயகலாதிடமொன்றாகக்காட்சியறப்பெற்றதே. (கூஉ)

பெற்றாளும்பொய்பிறப்பித்தானும்பொய்பெண்டிர்பிள்ளையு
யும்பொய், யுற்றாரும்பொய்யுலகத்தாரும்பொய்நம்முடம்புயிர்
பொய், கற்றார்பிதற்றலும்பொய்சமயாதிகடவுளர்பொய்
முற்றாமுலைவள்ளிபங்கனெங்கோன்மெய்யன்முன்னிற்கவே.

Koviloor Digital Library

முன்னிற்பதாரவன்முன்னிற்பதாருமுருகனவன்
னென்னிற்கும்வெம்பகலோவிருளோதெய்வம்வேறுளவோ
தன்னிற்குந்தன்னிழறன்னிடமானவத்தன்மையைப்போற்
றுன்னிற்குமுன்னிழனுனுன்னிடத்திலொடுக்கங்களே. (௬௪)

ஒடுக்கமுந்தோற்றமுமுன்னையல்லாதில்லையுன்னையுன்னுற்
படுக்கவிரட்சிக்கவும்பாரிருவினைப்பந்தமறு
மிடுக்கமுமின்பமுமில்லாதிடத்திலிருவருமற்
றடுக்கவுமுன்றனைச்சென்றுடுதீர்த்தம்வந்தாடினதே. (௬௫)

ஆடினபம்பரமோகயிறோவெறிந்தானிடமோ
சாடினதாபரமோவசைபோனதென்றன்னுயிருங்
கூடினதம்மையப்பனுமுன்றன்படுகுழிவீழ்ந்
தோடினதெவ்விடமவ்விடநீயென்றுணருவதே. (௬௬)

உணராதபோதமுறையாதுடற்பொருளாவியொன்றைப்
புணராதபோகப்பிறையற்றசோதிப்புலன்குழைய
மணராதவாசமகிழாதவாநந்தவள்ளிபங்கன்
கணமாகிலென்னைப்பிரியாச்சிவமின்றன்கண்வடிவே. (௬௭)

வடிவம்பொருளருண்முக்குணம்வாக்குமனமுமடி
முடிவுமில்லாதமுடிவினைச்சூட்டிமுருகனென்றே
படிகந்தனிற்கண்டகாட்சிப்பிரபஞ்சப்பார்வையற்றால்
விடியும்பொழுதிலிரண்டுமொன்றேதெய்வம்வேறில்லையே. ()

இல்லையுண்டென்பதிரண்டுஞ்சொல்லாதவிடமதன்னைக்
கல்லையுஞ்செம்பையுமண்ணையுங்கூட்டிக்கனிவுறுத

Koviloor Digital Library

லொல்லையிற்போனவுயிருடன்கூடியுதவிசெய்யா
தல்லையிற்சுத்தத்தவராகவன்புற்றாற்றுவதே. (கூகூ)

அரத்தலுமக்களிப்புமின்னதென்னவோராகமத்தாற்
பரத்தலும்பேசப்படாமையுமெங்கும்பராபரமாய்
நிரத்தலுமொன்றுநிரவாதமையுநினைப்புமறப்
பிரத்தலுமெய்தலுமில்லாததோற்றநீயெவ்வண்ணமே. (க00)

எவ்வண்ணமெவ்வுருவெவ்வுயிரெவ்வுளமென்றறியாச்
செவ்வண்ணவூமன்கனவுணாயற்றநின்சேவடியாய்ச்
சவ்வண்ணமென்றரன்சங்கரிகோரத்தைத்தான்கவர்ந்த
தவ்வண்ணமாதிமறைபேசவையமறிந்ததுவே. (க0க)

வையஞ்சலமங்கிகால்வான்பலவுயிர்வான்முடியோ
டெய்யும்பரமுதற்சார்வதெல்லாமெம்பிரான்முருகா
தெய்யனநின்றுநின்றாட்சிலம்போசைத்திருவிளையாட்
டையநின்னங்கமதென்னங்கமாய்நின்றவானந்தமே. (க0உ)

ஆறெழுத்தந்தாதி

முற்றிற்று.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 45768

Koviloor Digital Library

பிழைதிருத்தம்.

—*—

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
எ	சு	௩	சௌவு	சவ்வு
அ	கஉ	உ	மதாரஞ்	மாதாரஞ்
உக	அசு	௩	வத்தங்க	வைத்தங்க
உ௩	௬௪	க	முருகனவன்	முருகனவ

Koviloor Digital Library